செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 471 நாள்: 8/8/17

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
திட்ட செயலாக்க அலகு, வேலூர் மாவட்டம்
நாள்:05.08.2017.

## பத்திரிக்கை செய்தி

## தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சி

இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தேசிய அளவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கைவினைஞர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும், அவர்களின் பொருளதார மேம்பாட்டிற்கும் உதவி செய்யும் வகையில் தேசிய அளவில் நடத்தப்படும் கண்காட்சி சாராஸ் ஆகும்.

இக்கண்காட்சி வேலூர் மாவட்டத்தில் முதல் முறையாக 09.08.2017 முதல் 20.08.2017 வரை வேலூர் கோட்டை அருகில் உள்ள பெரியார் பூங்காவில் இலவச அனுமதியுடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

சாராஸ் கண்காட்சி ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தனித்துவம் பெற்ற பொருட்கள் ஒரே இடத்தில் கிடைப்பதால் இக்கண்காட்சி மிகவும் பிரசித்தி பெற்றதாகவும், வாடிக்கையாளரிடையே வரவேற்பு பெற்றுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம் பட்டு புடவைகள், கோயமுத்தூர் ஆபரணங்கள், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட பாசி மணிகள், விழுப்புரம், வேலூர் மாவட்ட தோல் பொருட்கள் மிகவும் பிரசித்திப் பெற்றவை மேலும் தேசிய அளவில் காஷ்மீர் மாநில குளிர்கால ஆடைகள், கல்கத்தா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேச ஆயத்த ஆடைகள் மற்றும் மரபொம்மைகள், மகாராஷ்ரா மாநில உலர் திராட்சை பழங்கள், கர்நாடக மாநில மைசூர் சில்க் சாரிஸ், கலம்கரி புடவைகள், அகர்பத்திகள் மற்றும் வாசனை பொருட்கள், ஆந்திரா மற்றும் தொலுங்கானா மாநில காட்டன் புடவைகள் மற்றும் ஊறுகாய், பஞ்சாப் மாநில தோல் பொருட்கள், ஜார்கண்ட் மாநில மூங்கில் பொருட்கள், கேரளா மாநில நறுமண பொருட்கள் மற்றும் கேரளா காட்டன் புடவைகள், ஹரியான மாநில செயற்கை ஆபரணங்கள், மணிப்பூர் மாநில வனத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மதிப்புக் கூட்டு பொருட்கள், கோவா மாநில செயற்கை அலங்கார பூக்கள், பீகார் மாநில கைதறி ஆடைகள், இராஜஸ்தான் மாநில பளிங்கினால் செய்யப்பட்ட ஆபரணங்கள் போன்ற பொருட்கள் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளது.

அனைத்து மாநில பொருட்களும் ஒரே இடத்தில் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளதால் வேலூர் மாவட்ட மக்களுக்கு இக்கண்காட்சி வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சுய உதவிக்குழுக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு அரசு மேற்கொள்ளும் இந்த முயற்சியில் உங்களது பங்களிப்பை வழங்கும் விதமாக இக்கண்காட்சி வருகை தந்து தேவையான தரம் நிறைந்த பொருட்களை குறைந்த விலையில் வாங்கி பயனடையுங்கள். பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பெரியார் பூங்காவில் நடத்தப்படும் கண்காட்சியில் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படவுள்ளது. குடும்பத்தோடு வருகை தந்து கண்காட்சியில் பொருட்களை கொள்முதல் செய்து மகிழ்வுடன் செல்ல கேட்டுக் கொள்கிறேன்.

ஒம்/-சி.ஆ.ராமன்
மாவட்ட ஆட்சித்தலைவர்

//உண்மை நகல்//உத்தரவு படி//

08/8/17

5.8.17
உதவி திட்ட அலுவலர்(P&C)

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.